## ஆர்.எஸ்.எஸ். என்கிற அபாயம்...




ஒரு நூறாண்டு கால சமூக நீதிக் கொள்கைகளுக்கான போராட்ட வரலாறு கொண்ட திராவிட நிலத்தில், தன் விதையினை ஊன்றிவிட, ஆர்.எஸ்.எஸ் பல முயற்சிகளைச் செய்து வருவதை அறிவோம். சட்டத்தின் துணையுடன் இன்று தடியோடு ஊர்வலம் போகும் அளவுக்கு வந்துள்ளனர்.

சித்பவன பார்ப்பனர்களைத் தலைமையாகக் கொண்ட ஓர் இயக்கம், மதத்தின் பெயரைச்சொல்லி மக்களைப் பிளவுபடுத்த மட்டும், பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட சமூகத்து இளைஞர்களைப் பயன்படுத்திக் கொள்கிறது.

இப்படியான சூழலில், ஆர்.எஸ்.எஸ் தொடங்கப்பட்ட பின்னணி மற்றும் வரலாறு குறித்து அம்பலப்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

ஒட்டுமொத்த இந்தியாவும் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது அவர்களது செயல்பாடு என்னவாக இருந்தது? அந்த அமைப்பின் தலைமை எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது? காந்தியின் கொலை வழக்கில், அவர்களின் பங்கு, வரலாறு முழுக்கவே முன்னுக்குப்பின் முரணாக இயங்கிக் கொண்டிருக்கும்.

ஆர்.எஸ்.எஸ்.ஸின் அபாயத்தை 30 ஆண்டுகளுக்கு முன்பே, ஆதாரங்களோடு அம்பலப்படுத்திய நூல், 'ஆர்.எஸ்.எஸ் ஓர் அபாயம்'. தோழர் விடுதலை இராசேந்திரன் அவர்களால் எழுதப்பட்டது.

30 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டிருந்தாலும், இன்றைய தலைமுறைக்கு அறியாத பல செய்திகளைத் தரும் 208 பக்க நூலினை, நன்செய் பதிப்பகம் மக்கள் பதிப்பாக ரூ.50 விலையில் வெளியிட்டுள்ளது.

நூலைப் பெற கீழ்க்கண்ட இணைப்பில் இணைந்து தகவல்களைப் பெறலாம்.

https://chat.whatsapp.com/Hb8AiQFMZJT2GjvImstc7O

## ::ப்ளாஷ்பேக்



### தலைவர் அணிவித்த சால்வை!



காயத்ரி

1984-ஆம் ஆண்டு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கடலூர் மாவட்டம், மங்களூர் ஒன்றியத்திற்கு வருகை தந்திருந்தார். அப்போது நிதி அளிப்புப் பொதுக்கூட்டமாக, இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. அதிகம் நிதி திரட்டியவர்களைப் பாராட்டிய நிலையில், அன்றைய ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த என்னுடைய தந்தை மு.செயராமன் அவர்களுக்கு தளபதி அவர்கள் சால்வை அணிவித்து, சிறப்பு செய்தார். இன்றளவும் இந்தப் புகைப்படம் எங்கள் இல்லத்தை அலங்கரித்து வருகிறது.

**– காயத்ரி, பொறியாளர்,**
**பனையாந்தூர் கிராமம், கடலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### பேரறிஞர் அண்ணாவின் புரட்சி!

1968-ஆம் ஆண்டு, சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டப்பூர்வமாக்கினார் பேரறிஞர் அண்ணா. இந்துத் திருமணச் சட்டம் பிரிவு- 7A திருத்தச் சட்டம், அண்ணாவின் புரட்சியாகப் பார்க்கப்பட்டது. அதுவரை நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வத் தகுதி பெற்றதோடு மட்டுமல்லாமல், பார்ப்பன புரோகிதர்கள் மற்றும் சடங்குகள் எதுவும் இல்லாமல், சுயமரியாதைத் திருமணங்கள் பெருமளவில் நடைபெறவும் இச்சட்டம் வழிவகுத்தது.

# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 33

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**




# பார்ப்பனரல்லாத மக்களின் கொள்கை அறிக்கை!

*பிளாசிப் போரில் (1757) சிராஜ்-உத்-தவ்லாவை வீழ்த்தி, வங்கத்தை வென்றது முதல் ஒட்டுமொத்த இந்தியா முழுவதையும் ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய காலகட்டத்தில் இருவகையான போக்குகள் இருந்தன. முதலாமவர், ஹைதர் திப்பு, ஊமைத்துரை, கட்டபொம்மன் என ஆங்கிலேயர் ஆட்சியை ஏற்க மனமின்றி உரிமைக்குப் போராடிய வீரமரபினர். இரண்டாமவர், நாட்டை யார் ஆண்டால் என்ன, என்று கருதியதோடு மட்டுமில்லாமல், அதில் தங்களுக்கு என்ன பங்கு கிடைக்கும் என்பதை மட்டுமே முதன்மையாகக் கொண்டு செயல்பட்ட மரபினர். இவர்கள் மட்டுமே ஆங்கிலேயர்கள் ஆட்சியில் தொடங்கப்பட்ட பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயின்றனர். ஆங்கிலம் கற்றுக்கொண்டு, அரசுப் பதவியையும் பெற்றுக்கொண்டு எல்லாத் துறையிலும் ஆதிக்கம் பெற்றவராய் திகழ்ந்தனர். நடப்பது ஆங்கிலேயர் ஆட்சியா அல்லது ஆதிக்க வகுப்பாரின் ஆட்சியா என்ற சந்தேகம் எழும் அளவுக்கு பார்ப்பனர்கள் ஆதிக்கம் செலுத்தினர். பெரும்பான்மை மக்கள் கல்வி பயில அனுமதி இல்லாதவர்களாகவும் ஆட்சியில் பங்கு இல்லாதவர்களாகவும் இருந்தனர்.*

### வழிகாட்டிய மாகாணம்

*ஆதிக்கம் இருந்தால் ஆதிக்க எதிர்ப்பு இருக்குமல்லவா? அனைத்தையும் தங்களுக்கே ஒதுக்கிக்கொண்ட பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்த்ததில் சென்னை மாகாணம் இந்தியாவுக்கே வழிகாட்டியாகத் திகழ்ந்தது. அதன் விளைவாகவே ஆங்கிலேய அரசு, அரசு வேலைகளில் அனைத்துச் சாதியினரையும் நியமிக்கவேண்டும் என்று வருவாய்த் துறை நிலையாணை (Standing Order 128-2) ஒன்றை 1854-இல் வெளியிட்டனர். சென்னை மாகாண அரசில் பணிபுரிந்த பார்ப்பனரல்லாத அதிகாரி ஒருவர் Fair Play என்ற புனைப்பெயரில் கவர்னராக இருந்த வென்லாக் பிரபுவுக்கு (Lord Wenlock), பார்ப்பனரல்லாத வகுப்புகளும் இந்தியப் பொதுத்துறையும் (The Non-Brahmin Races and Indian Public Service), பார்ப்பனரல்லாத வகுப்புகளை மேம்படுத்தும் வழிமுறைகள் (The Ways and Means to Amelioration of the Non-Brahmin Races) என்ற பெயர்களில் இரு கடிதங்களை எழுதினார். ஆங்கிலேயர்கள் இந்நாட்டை ஆள்வதாகச் சொல்லப்பட்டாலும், உண்மையில் பார்ப்பனர்களே ஆள்கின்றனர் என்று கூறிய இக்கடிதங்கள் அரசு வேலைகளில் பார்ப்பனரல்லாத மக்களுக்கு அவர்களின் மக்கள்தொகைக்கு ஏற்ப இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரின.*

*இவையெல்லாம் மிகச்சிறிய அளவிலான துவக்கம் மட்டுமே. இருப்பினும் ஆங்கிலேய அரசின் நிலையாணை சரியான முறையில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அனைத்துச் சாதியினரையும் அரசு வேலைகளில் நியமிக்க வேண்டும் என்றிருந்த அரசின் நிலையாணையைப் புறக்கணித்துவிட்டு, நெல்லூர் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் வெங்கட்டரமண்ணய்யர் எனும் தெலுங்குப் பார்ப்பனரின் 49 உறவினர்களை அரசுப் பதவிகளில் நியமனம் செய்தனர். ஏனெனில், அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர் ஆதிக்கம் நிறைந்திருந்த காலம் அது.*

*உதாரணத்திற்கு, 1912-இல் சென்னை மாகாணத்தின் மக்கள் தொகையில் 3.2 விழுக்காடு மட்டுமே இருந்த பார்ப்பனர்கள் 83.3 விழுக்காடு நீதிபதி பதவிகளை (SUB JUDGE) ஆக்கிரமித்திருந்தனர். அதே வேளையில், 85.6 விழுக்காடு மக்கள் தொகை கொண்டிருந்த பார்ப்பனரல்லாதவர்கள் வெறும் 16.7 விழுக்காடு நீதிபதி பதவிகளை மட்டுமே பெற்றிருந்தனர்.*

### பார்ப்பனர்களுக்கே உத்யோகம்

*"பார்ப்பனர்களுக்கே புரோகித வேலை என்ற திட்டம் சமூகத் துறையில் அமைந்தது போலவே, பார்ப்பனர்களுக்கே உத்தியோக மண்டலம், மற்றவர்களுக்கு அங்கு வேலை இல்லை, இடமில்லை, தகுதி பெறவும் வாய்ப்பில்லை என்ற துக்ககரமான நிலை அரசியல் துறையில் ஏற்பட்டது. தமிழகத்தார் - தென்னாட்டார், பிற்படுத்தப்பட்ட மக்களாயினர், ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோர், புலி வேஷம் போடுகின்றனர், எலியாக முயலாக இருக்கின்றோம் நாம் என்று, நல்லறிவாளர் எண்ணி ஏக்கமுறும் நிலை பிறந்தது. எங்கும் இருள் சூழ்ந்தது" என்று பேராசிரியர் க.அன்பழகன் அன்றைய நிலையைப் பதிவு செய்திருந்தார்.*

*இருள் சூழ்ந்த இந்நிலையை நீடிக்கவிட்டால், பெரும்பான்மையான பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கல்வியும் வேலை வாய்ப்பும் எட்டாக்கனியாகவே இருக்கும் என்ற உணர்வு கொண்டோர் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வந்தது. அவர்களில் மூவர் முக்கியமானவர். முதலாமவர் 'வெள்ளுடை வேந்தர்' என அழைக்கப்பட்ட பிட்டி தியாகராயர், இரண்டாமவர் டாக்டர் தாரவாட் மாதவன் நாயர், மூன்றாமவர் டாக்டர் நடேசனார். பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு கல்வி கற்க உதவும் விதமாக விடுதி ஒன்றை 1914-இல் சென்னையில் டாக்டர் நடேசனார் துவங்கினார். இரு ஆண்டுகள் கழித்து,*

**மௌனம் காத்த பார்ப்பனரல்லாதவர்களின் உணர்வைத் தட்டி எழுப்பி, உரிமைக்குப் போராட அழைக்கும் திறவுகோலாக பார்ப்பனரல்லாதார் அறிக்கை அமைந்தது.**

*1916-ஆம் ஆண்டு நவம்பரில் மூவரும் இணைந்து தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தைத் தோற்றுவித்தனர்.*

*அடுத்த மாதம், 1916-ஆம் ஆண்டு டிசம்பரில் தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் தயாரித்த பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை வெளிவந்தது. கிட்டத்தட்ட 4 கோடி மக்கள்தொகை கொண்ட சென்னை மாகாண பார்ப்பனரல்லாத மக்களின் உண்மையான நிலை பற்றி, பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை விவரித்தது. அன்றைய சென்னை மாகாணத்தில் இருந்த 140 உதவி கலெக்டர் இடங்களில் 77 இடங்களைப் பார்ப்பனர்கள் பிடித்திருந்தனர். பார்ப்பனரல்லாதார்க்கு வெறும் 30 இடங்கள் மட்டுமே. சென்னை மாநிலத்தில் இருந்து அனைத்திந்திய காங்கிரஸ் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 உறுப்பினர்களில் 14 பேர் பார்ப்பனர்கள். ஒருவர் மட்டுமே பார்ப்பனரல்லாத வகுப்பைச் சேர்ந்தவர். 1901-ஆம் ஆண்டு முதல் 1911-ஆம் ஆண்டு வரையிலான பத்து ஆண்டுகளில், மெட்ராஸ் பல்கலைக்கழகத்தில் 4,074 பார்ப்பன மாணவர்கள் பட்டம் பெற்றனர். அவர்களுடன் ஒப்பிடும்போது வெறும் 1,035 பார்ப்பனரல்லாத மாணவர்கள் மட்டுமே பட்டம் பெற்றிருந்தனர். வேலைவாய்ப்பு, கல்வி, அரசியல் என அனைத்துத் துறைகளிலும் ஒரு வகுப்பார் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவதை யாரால் பொறுக்க இயலும்?*

### வகுப்புவாரி உரிமை

*அன்று நிலவிய பார்ப்பனர் ஆதிக்கத்தைச் சுட்டிக்காட்டிய பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை அதிகாரத்தை எல்லோருக்கும் பகிர்ந்து அளிக்கும் சுயஆட்சி வேண்டும் என்று கோரியது. அதன்படி ஒவ்வொரு வகுப்பினருக்கும் அவரவர்களுக்கு நாட்டில் உள்ள மக்கள்தொகை எண்ணிக்கைக்கு ஏற்ப அவரவர்களுக்கு உரிய பொறுப்பைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்தியது. அன்றிருந்த பத்திரிகைகள் பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கையைக் கடுமையாக விமர்சித்தன. தேச நலனைக் கெடுக்கும் தன்மை கொண்டது என்று விமர்சித்தது, ஆங்கில இந்து (The Hindu) நாளிதழ். மற்றொரு பத்திரிக்கை "இழிந்த மனநிலை கொண்டவர்களின் தயாரிப்பு" என்றது.*


*இவ்வாறு தோன்றிய எதிர்ப்பையும் அவதூறுப் பிரச்சாரத்தையும் மீறி, 'பார்ப்பனரல்லாதாரின் மாக்னா கார்ட்டா' (MAGNA CARTA) என்று அழைக்கப்படும் அளவுக்கு பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை பார்ப்பனரல்லாத மக்களின் வரவேற்பைப் பெற்றது. பல நூறு ஆண்டுகளாகத் தாங்கள் அனுபவித்த சாதிய ஒடுக்குமுறை குறித்து, மௌனம் காத்த பார்ப்பனரல்லாதவர்களின் உணர்வைத் தட்டி எழுப்பி, உரிமைக்குப் போராட அழைக்கும் திறவுகோலாக பார்ப்பனரல்லாதார் அறிக்கை அமைந்தது. ஆதிக்க சக்திகளுக்கு எதிராக பார்ப்பனரல்லாதோர் நடத்தும் நீண்ட நெடிய போராட்டத்தின் தொடக்கத்தைக் குறிக்கும் வரலாற்று ஆவணமாக 2000 சொற்கள் கூட இல்லாத பார்ப்பரனல்லாதார் கொள்கை அறிக்கை விளங்கியது என்று சொல்வது, மிகப் பொருத்தமாக இருக்கும். சுருங்கச் சொன்னால் வருங்காலத்தைத் தீர்மானிக்கப் போகும் சமூக நீதிக் கொள்கையின் சுருக்கமான வடிவமாகப் பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை அமைந்தது.*

**...குரல் ஒலிக்கும்**

# திராவிடத்தால் வாழ்கிறோம்

631

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131